**செய்தி வெளியீடு எண்: 735** **நாள்:30.10.2019**

# செய்தி வெளியீடு

## மாநில அளவிலான ஓவிய–சிற்பக் கலைக்காட்சி தொடக்கவிழா மற்றும் சிறந்த கலைப்படைப்புகள் வழங்கிய 60 கலைஞர்களுக்கு விருது வழங்குதல்

தமிழ்நாட்டில் ஓவிய சிற்பக் கலைகளை ஊக்கப்படுத்தவும், அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் திறமைகளை மேம்படுத்தவும், மாநில அளவில் மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில் ‘‘ஓவிய–சிற்பக் கலைக்காட்சி’’ ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள கலைஞர்களிடமிருந்து ஓவிய, சிற்பக் கலைப்படைப்புகள் பெறப்பட்டு, அவற்றிலிருந்து அரசால் அமைக்கப்படும் தெரிவுக் குழுவால் கலைப்படைப்புகள் தெரிவு செய்யப்பட்டு, கலைக்காட்சியாக காட்சிப்படுத்தப்பட்டு, விருதுகள் வழங்கப்படுகின்றன. 15 மூத்தக் கலைஞர்களுக்கு தலா ரூ.15,000/–வீதமும், 15 இளங்கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/–வீதமும் என ஒவ்வொரு ஆண்டுக்கும் 30 கலைஞர்களுக்கு விருதுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் கலை பண்பாட்டுத் துறையின் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், 2017–2018 மற்றும் 2018–2019 ஆம் ஆண்டுகளுக்கு 132 கலைஞர்களிடமிருந்து பெறப்பட்ட கலைப்படைப்புகளிலிருந்து, அரசால் அமைக்கப்பட்ட தெரிவுக்குழுவால் மிகச்சிறந்த 60 கலைப்படைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

01.11.2019 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறவுள்ள ‘‘**தமிழ்நாடு நாள்**’’ விழாவின் போது, 132 கலைஞர்களின் கலைப்படைப்புகள் அடங்கிய கலைக்காட்சினை மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் 9.30 மணிக்கு தொடங்கி வைக்கப்படவும், அதனைத் தொடர்ந்து, தெரிவு செய்யப்பட்ட 60 கலைஞர்களுக்கு விருதுத் தொகையும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு நாள் விழாவின் போது கலை பண்பாட்டுத் துறையின் சார்பாக பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படவுள்ளன.

## கலைச்செம்மல் விருதுகள் வழங்கும் விழா

ஓவிய சிற்பக் கலைகளை ஊக்கப்படுத்தவும், அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் திறமைகளை மேம்படுத்தவும், மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில் சாதனைகள் புரிந்து சிறந்து விளங்கும் ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு “ கலைச் செம்மல் விருதுகள்” தமிழக அரசின் கலை பண்பாட்டுத்துறையால் வழங்கப்பட்டு வருகின்றன. கலைச்செம்மல் விருது பெறும் கலைஞர்களுக்கு செப்புப்பட்டயம் மற்றும் விருதுத் தொகையாக ரூ.50,000/– வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மரபுவழி பிரிவில் ஒரு கலைஞருக்கும், நவீனபாணி பிரிவில் ஒரு கலைஞருக்கு என ஆண்டுதோறும் இரண்டு கலைஞர்களுக்கு கலைச்செம்மல் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், 2013–2014 முதல் 2017–2018 ஆம் ஆண்டு வரை மரபு வழி மற்றும் நவீனபாணி பிரிவில் கலைச்செம்மல் விருதிற்கு பின்வரும் 10 கலைஞர்கள் தமிழக அரசால் தெரிவு செய்யப்பட்டனர்.

| ஆண்டு | நவீணபாணி பிரிவு | மரபு வழி பிரிவு |
|---|---|---|
| 2013–2014 | திரு பி.எஸ்.நந்தன் | திரு எஸ்.கண்பதி ஸ்தபதி |
| 2014–2015 | திரு பி.கோபிநாத் | திரு இராமஜெயம் |
| 2015–2016 | திரு அனந்தநாராயணன் நாகராஜன் | திருமதி எம்.தமிழரசி |
| 2016–2017 | திரு சி.டக்ளஸ் | திரு எஸ்.கீர்த்திவர்மன் |
| 2017–2018 | திரு ஜெயக்குமார் | திரு ஆ.கோபாலன் ஸ்தபதி |

01.11.2019 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும் **“தமிழ்நாடு நாள்”** விழாவில் ஓவிய மற்றும் சிற்பக் கலையில் மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில் சாதனைகள் புரிந்த மேற்காண் 10 கலைஞர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் கலைச்செம்மல் விருதிற்கான செப்பு பட்டயமும், ரூ.50,000/–த்திற்கான காசோலையும் வழங்கப்படவுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**